ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2088/32 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12
*2088/32 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

இறால் வளர்ப்பும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆவது அத்தியாயம்) 30 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான சம்பளச் சபை உத்தேசிப்பதாக, சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட தீர்மானங்களுக்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை இச்சம்பளச் சபையின் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப் படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, செத்தெம்பர் 10.

**அட்டவணை**

இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு

1A - G28498 - 52 (2018/09)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதிய 1073/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், இறுதியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட அட்டவணைக்கு பின்வரும் பகுதி உள்ளடக்கப்படுதல் வேண்டும். இறால் வளர்ப்பும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக் குறைந்த திரட்டிய மாதாந்த சம்பள வீதங்கள் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்.

## பகுதி I
## தொழிலாளர் வகுப்பு

**தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள்**

சீமெந்து வேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர், நீர் வழங்குவோர், தாங்கிகளிலிருந்து நீரை வெளியேற்றுவோர், வடிகால் நீரை இறைக்கும் நிலையக் கட்டுப்பாட்டாளர், வடிகால் நீர் இறைப்போர், நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவோர், ஒட்சிசன் வழங்குவோர், வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவோர், உணவு, விற்றமின், மருந்துகளை வழங்குவோர், விலங்கு உணவுகளை வழங்கும் தொழிலாளர்/ களஞ்சியப் பொறுப்பாளர்கள், அறுவடைகளைப் பொறுப்பேற்போர்/ களஞ்சியப் பொறுப்பாளர்கள், சரி பிழை பார்ப்போர்/ தரக் கட்டுப்பாட்டை மேற்கொள்வோர், வெட்டுவோர், சுத்தம் செய்வோர், இறால்களை வகை (தரம்) படுத்துவோர், சரி பிழை பார்ப்போர், தாங்கிகளை அமைக்கும் தொழிலாளர்கள், அறுவடைகளைச் சேகரிப்போர், படகுகளைச் செலுத்துவோர் (படகு ஓட்டுனர்கள்) பொதிகள் செய்வோர், குளிரூட்டப்பட்ட அறைகளில் ஈடுபடுவோர்.

**ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள்**

நிலத்தைச் செம்மையாக்கும் தொழிலாளர்கள், தாங்கிகளைக் காவல் காப்போர்/ காவலாளர்கள், கயிறு இழுப்போர், முத்திரை பதிப்போர், செலோபேன் பைகளையும் காட்போர்ட் பெட்டிகளையும் தயாரிப்போர், கல்வேலி அமைப்போரும், நடைபாதைகள் அமைப்போரும்.

**தேர்ச்சியற்ற தொழிலாளர்கள்**

தாங்கிகளைச் சுத்திகரிப்போர், தாங்கிகளைப் பிராணிகளிடமிருந்து பாதுகாப்போர், குளிரூட்டப்பட்ட அறைகளைச் சுத்தம் செய்வோர் மேற்படி பந்திகளில் உள்ள வேலைகளுடன் தொடர்பான அல்லது அதனுடன் தொடர்பான இடை நிகழ்வான ஏதேனும் வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

பின்வரும் தொழிலாளர்கள் இச்சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் தீர்மானங்களுக்கு உட்பட மாட்டார்கள்.

- 02.11.1945 ஆம் ஆண்டின் 9481ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத் தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.

- 07.01.1944 ஆம் ஆண்டின் 9224 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபையில் (அதன் பின்னரான திருத்தங்கள்) குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத் தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.

- பின்வரும் தொழிலாளர்கள் இச் சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் தீர்மானங்களுக்கு உட்பட மாட்டார்கள். எழுதுவினைஞர், காசாளர்கள், நேரப்பதிவாளர்கள், காவலாளர்கள்.

**பகுதி II**

**ஒரு மாதத்திற்கு கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| **ஊழிய ஆண்டு** | **பயிற்சி** ரூ. ச. | **இடைநிலைப் பயிற்சி** ரூ. ச. | **பயிற்சியற்ற** ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 7,800.00 | 7,320.00 | 6,900.00 |
| 2 ஆம் ஆண்டு | 7,950.00 | 7,445.00 | 7,000.00 |
| 3 ஆம் ஆண்டு | 8,100.00 | 7,570.00 | 7,100.00 |
| 4 ஆம் ஆண்டு | 8,250.00 | 7,695.00 | 7,200.00 |
| 5 ஆம் ஆண்டு | 8, 400.00 | 7,820.00 | 7,300.00 |

09 - 728/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறான சபையின் முடிபுகளை அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென அக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்சொல்லப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப் படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
மேசுவகை உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, செத்தெம்பர் 04.

**அட்டவணை**

மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 14725 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்ட வாறானவையும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிய 1800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான முடிபுகள் அட்டவணையில் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி II

**ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பளம்**

**தொழிலாளர் வகுப்பு :**

தரம் I : பிரதான வேலையாளர் அல்லது தலைவர்கள் பிரிவு மேற்பார்வையாளர் படனம் அடுக்கும் இயந்திரம் இயக்குவோர்.

தரம் II : வெள்ளாவித் தொட்டி இயக்குவோர், நீராவிக்கொதிகலமியக்குவோர், கழுவு இயந்திரம் இயக்குவோர், நிறமூட்டும் இயந்திரம் இயக்குவோர், நீரகற்றும் இயந்திரம் இயக்குவோர், மெருகிடும் இயந்திரம் இயக்குவோர், உலர்த்தும் இயந்திரம் இயக்குவோர், இயந்திரம் திருத்துவோர் நுட்பவியலாளர் (பொது நோக்கு) சாயமூட்டுவோர் (ஆண்கள்) பின்னும் இயந்திரம் திருத்துவோர்கள், திரை அச்சிடுவோர், திரை அச்சிடுபொறி வேலையாளர் (பெண்கள்) திரை அச்சீட்டு உதவியாளர், தையல் இயந்திரம் திருத்துவோர்.

தரம் III : சீத்தை படலம் இயக்குவோர் (பெண்கள்) வெட்டும் இயந்திரம் இயக்குவோர், மின்சக்தியால் வெட்டும் இயந்திரம் இயக்குவோர் (கையினால்) வெட்டுவோர், தையல் இயந்திரம் இயக்குவோர், சீத்தை கொதிக்கவைக்கும் தொழிலாளர்கள், வெளிறச் செய்யும் வேலையாளர்கள் (ஆண்கள்) பின்னல் இயந்திரம் இயக்குவோர், சீர்ப்படுத்தும் வேலையாளர்கள் (பெண்கள்) நேர்த்தியாக்கும்.

வேலையாளர்கள் (பெண்கள்) இஸ்திரிகை போடுவோர் (ஆண்கள்) மின்சக்தியால் இஸ்திரிகை போடுவோர் சரிபார்ப்போர் (பெண்கள்) வகைப்படுத்துவோர் (பெண்கள்) கட்டாக்குவோர், கட்டாக்கி முத்திரை அச்சிடுவோர், (பெண்கள்) சப்பாத்து நாடா, பின்னற் கயிறு, பின்னல் நாடா இயந்திரம் இயக்குவோர், செலபேன் பைகளும் அட்டைப் பெட்டிகளும் செய்வோர், சுற்றுமியந்திரம் இயக்குவோர்.

தரம் IV : தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் (மேலே குறிக்கப்பட்ட எவராயினும் ஒரு தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் சம்பந்தப்பட்ட வரையில் வேலை பழகும் காலம் 156 வேலை நாட்களைக் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.)

**ஒரு மாதத்திற்கான ஆகக் குறைந்த சம்பளம்**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 13,035.00 | 12,514.00 | 12,000.00 | 7,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 13,185.00 | 12,639.00 | 12,100.00 | |
| 3 ஆம் ஆண்டு | 13,335.00 | 12,764.00 | 12,200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 13,485.00 | 12,889.00 | 12,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 13,635.00 | 13,014.00 | 12,400.00 | |

09 - 728/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழில் தொடர்பான சம்பளச் சபை

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாக தமக்களிக்கப்பட்டுள்ள சபையின் முடிவுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப் படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
செங்கல், ஓடு உற்பத்தி தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, ஓகத்து 27.

**அட்டவணை**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1961, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 12617 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள் அட்டவணையில் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பள அளவும் ஆகக்குறைந்த மாதச் சம்பள அளவும் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும்.

**வேலையாளர் வகுப்பு :**

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I :**

பதிப்பு இயந்திரத்திற்கு களிமண் ஊட்டுநர் (இயந்திரம்), சூளையில் (சூட்டடுப்பில்) வேலைபார்க்கும் தீவைப்போர்.

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் II :**

பதிப்பு இயந்திரத்திற்கு ஊட்டுவோர் (கையால்), களிமண் ஓடுகளைச் சுடுவதற்காகச் சூளையில் ஏற்றுவதில் அல்லது அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்/தரம் பிரிப்போர்.

**ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் :**

உருளை வேலையாளர், மொத்த உருவெட்டுநர், ஓட்டுத் தகட்டுக்கு எண்ணெய் பூசுவோர், அத்துடன் மெருகூட்டுவோர், நறுக்குவோர், காயாத ஓடுகளை தரம் பிரிப்போர், வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்காக ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

**தேர்ச்சியற்ற வேலையாளர்கள்**

களிமண் கலப்பதிலும் பதமாக்குவதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், இழுவண்டியில் நிரப்புவோர், களிமண் வேலையாட்கள், மொத்த உருகாவுவோர், இயந்திர மூலமாகக் கலப்பதிலும் நீர் சேர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அடுக்குவரிசை அமைப்புக்களில் ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், ஓடுகளை காயவைப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், காயாத ஓடுகள் தரம் பிரிப்போருக்கு உதவுவததில் ஈடுபட்டுள்ள

வேலையாளர்கள் விறகு காவுவோர், நீர்விட்டுக் குழைக்கும் இயந்திரம் ஓட்டுநர், உலையிலிருந்து சுட்ட ஓடுகளை அகற்றுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அமுக்கு இயந்திரங்களுக்கு அல்லது களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கு களிமண் தொகுதிகளை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், சுடுவதற்காகச் சூளைகளுக்குள் ஓடுகளை ஏற்றுவதிலும் அடுக்குவதிலும் ஈடுபட்டுள்ள உதவியாளர்கள்.

**சாதாரண வேலை நாளொன்றிற்கான சம்பள வீதங்கள்**

| நிரல் I<br>வேலையாளர் வகுப்பு | நிரல் II<br>ரூ. ச. |
|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I | 532.00 |
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் II | 503.00 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 474.00 |
| தேர்ச்சியற்ற வேலையாளர்கள் | 445.00 |

**ஒரு மாதத்திற்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| வேலையாளர் வகுப்பு | 1 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 2 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 3 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 4 ஆம் ஆண்டு<br>ரூ. ச. | 5 ஆம் ஆண்டு<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I | 13,302.00 | 13,477.00 | 13,652.00 | 13,827.00 | 14,002.00 |
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் II | 12,578.00 | 12,728.00 | 12,878.00 | 13,028.00 | 13,178.00 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 11,852.00 | 11,977.00 | 12,102.00 | 12,227.00 | 12,352.00 |
| தேர்ச்சி யற்ற வேலையாளர்கள் | 11,126.00 | 11,226.00 | 11,326.00 | 11,426.00 | 11,526.00 |

09 - 728/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின்

தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 – ஆம் அத்தியாயம்) 28 – ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் ஆட்சேபனைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றை உடையதாய் எழுத்துவாயிலாகச் செய்யப்படல் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 04.

**அட்டவணை**

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாகவும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் மற்றும் III ஆம் பாகங்களுக்குப் பதிலாக பின்வரும் புதிய பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் விவரிக்கப்பட்டுள்ள தெங்கு உற்பத்தித் தொழிலுக்குரிய நடவடிக்கைகளின் குறித்த சில செய்முறைகளுக்குப் பொருந்துவனவும் துண்டு வேலைக்குரியனவுமான கீழெல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு :

| **செய்முறைகள்** | | **வீதம்**<br>ரூ. ச. |
|---|---|---|
| உலர்த்திய தேங்காய்ப் பூ உற்பத்தி<br>தேங்காய்களை உரித்தல் | 1000 காய்களுக்கு | 460.00 |
| சிரட்டைகளை அகற்றுதல் | 1000 காய்களுக்கு | 319.00 |
| மேல் தோல் சீவுதல் | 1000 காய்களுக்கு | 319.00 |
| தேங்காய்ப் பருப்பைக் கழுவுதலும் உடைத்தலும் | 1000 இறாத்தலுக்கு | 278.00 |
| உலர்த்துதல் (சுயமாகவன்றி) | 1000 இறாத்தலுக்கு | 218.00 |
| சிறு துண்டுகளாக்குதல் மூலம் உலர்த்தல் | 1000 இறாத்தலுக்கு | 293.00 |
| சலித்தெடுக்கும் வகைப்படுத்தலும் | 1000 இறாத்தலுக்கு | 247.00 |
| அடைத்தலும் பெட்டிகளுக்கு<br>அடையாளமிடுதலும் | 120– 130 இறாத்தல்<br>வரையான பை ஒன்றிற்கு | 19.00 |

**குடிசைக் கைத்தொழிலாகவன்றி வேறு வகையில் தும்பு, கயிறு ஆகியன உற்பத்தி செய்தல்**

| | | |
|---|---|---|
| மட்டை அடித்தல் (கிளர்த்திய பின் ஈர நிறை) | அந்தர் ஒன்றிற்கு | 201.00 |
| மட்டைகளைப் பிரித்தலும் சுத்தப்படுத்தலும் (ஈரநிறை) | அந்தர் ஒன்றிற்கு | 201.00 |
| மெத்தைத்தும்பு சுத்தப்படுத்தலும் காயவைத்தலும், சிப்பமாக்குதலும் | அந்தர் ஒன்றிற்கு | 172.00 |
| சிலிர்த்த தும்பைக் கிளர்த்தலும், சிப்பமாக்குதலும் | அந்தர் ஒன்றிற்கு | 163.00 |
| பாய்களின் உற்பத்தியும் பின்னலும் : | | |
| பாய்கள் | சதுர அடி ஒன்றிற்கு | 197.00 |
| பின்னல் பாய்கள் | சதுர யார் ஒன்றிற்கு | 179.00 |
| சிலிர்த்த தும்பைச் சிக்குவாங்குதலும் கூட்டுதலும் | அந்தர் ஒன்றிற்கு | 534.00 |

**பகுதி III**

**நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பளம்**

இதனோடுள்ள I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சாதாரண வேலைநாளொன்றிற்கு ஏற்புடையதாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம், II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பிரிவில் தரப்பட்டுள்ள வீதமாகும்.

| | | நிரல் I<br>வேலையாளர் வகுப்பு | நிரல் II<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 01. | உலர்த்திய தேங்காய் உற்பத்தி செய்வதில் | கங்காணி ஒருவருக்கு | 506.00 |
| 02. | தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதில் | வேலையாள் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 488.00 |
| 03. | இழை உற்பத்திப் பொருட்களையும் தும்பு உற்பத்திப் பொருட்களையும் செய்வதில் | 18 வயதிற்குக் குறைந்த வேலையாளர் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 425.00 |
| 04. | தும்பு, சிலிர்த்த தும்பு உற்பத்தி | கங்காணி ஒருவருக்கு | 425.00 |

09 - 728/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

தீப்பெட்டி உற்பதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆவது அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கபட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிவுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
தீப்பெட்டி தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 10.

**அட்டவணை**

*தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1947 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் தேதிய 9708 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் தேதிய 1800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலுக்கு புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

**பகுதி II**

**நேரவேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதம்**

I ஆம் நிரலிற் குறிக்கப்பட்டுள்ள தொழிலாளருக்கு இயைபுடைய சாதாரண வேலைநாளுக்குரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம், II ஆம் நிரலில் அந்தந்த தரத்திற்கு நேரே குறிக்கப்பட்டுள்ள வீத அளவினதாக இருத்தல் வேண்டும்.

| நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் I<br>நாளுக்குரிய வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| I ஆம் தரம் : | |
| மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகள் வெட்டுதல், மெஷின் டிரைவரால் சிராய்த் தகடுகளை உரித்தல், விளிம்புகள், வெளிப்பெட்டிகள் அருகுகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷின் டிரைவரால் கத்திகளையும் ஆயுதங்களையும் தீட்டுதல், மெஷின் டிரைவரால் சட்டங்களைக் குச்சால் நிரப்புதல், மெஷீன் டிரைவரால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல், மெஷின் டிரைவரால் ஓரங்களுக்கு மருந்து பூசுதல், நெருப்புக் குச்சி நுனிக்குப் பூசும் மருந்து கலத்தல், மெஷின் டிரைவரால் கடதாசிகளை நாடாக்களாக வெட்டுதல், ஓவசியரின் அல்லது கங்காணியின் வேலை மெஷின் டிரைவரால் பெட்டி நிரப்புதல். | 540.00 |
| II ஆம் தரம் : | |
| கையால் குறுக்கே துண்டுதுண்டுகளாக வெட்டுதல், மெஷின் டிரைவரால் குறுக்கே துண்டுதுண்டுகளாக வெட்டுதல், தகடுகள் மட்டுப்படுத்தல், வெட்டுக்கருவியால் வெளிப்பெட்டி அருகுகள் விளிம்புகள், கீழ்ப்புற அருகுகள் ஆகியவற்றை வெட்டுதல், மெஷினால் உட்பெட்டி செய்தல், உதவி செய்பவரால் மெஷினை உபயோகித்துக் கத்திகளையும் ஆயுதங்களையும் தீட்டுதல், கையால் வெண் மெழுகு பூசுதல், சட்டங்களிலிருந்து குச்சிகளைக் காலியாக்குதல், பெட்டியின் ஓரங்களுக்கு மருந்து புசுதல், நிரப்பிய பெட்டிகளைச் சரிபார்த்தல், மெஷின் டிரைவரால் கடதாசி நாடா இடுதல், பெட்டிகளின் ஓரங்களுக்குப் பூசுவதற்கு மருந்து கலத்தல் மெஷினால் வெளிப்பெட்டி செய்தல், பெட்டிகளை நிரப்புவதற்கு மெஷினால் பெட்டிகளை எடுத்துதவுதல், கையால் இரசாயன சேர்க்கையில் குச்சிகளைத் தோய்த்தல். | 520.00 |
| III ஆம் தரம் : | |
| மேலே I ஆம் அல்லது II ஆம் தரங்களிற் குறிக்கப்படாத காவற்காரரின் வேலை தவிர்ந்த (தீப்பெட்டித் தொழிலிலுள்ள) தொழிலாளர் யாவரினதும் வேலை. | 500.00 |
| IV ஆம் தரம் : | |
| காவற்காரரின் வேலை | 540.00 |

09 - 728/5